OS.No. : 04/2022 C/w 45/2023 & 46/2023

நாள் : 04.03.2025

பி.வா.சா. : 2

பெயர் : சாமுண்டேஷ்வரி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் BBA படித்திருக்கிறேன். ஆறு மாதம் அக்ரிகல்சர் கோர்ஸ் முடித்திருக்கிறேன். Type writting படித்திருக்கிறேன். நான் திருமணத்திற்கு முன்போ பின்போ வேலைக்கு போனேனா என்றால் திருமணத்திற்கு முன்பு வேலைக்கு போகவில்லை திருமணத்திற்கு பிறகு எனது கணவரின் சொந்த பிஸ்னஸ்க்கு உதவியாக இருந்தேன். தற்போது விவசாயம் பார்த்து வருகிறேன். எனக்கும் 3 ம்பிரதிவாதியான என் கணவருக்கும் 06.09.2001 ல் திருமணம் நடந்தது. எங்கள் திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடந்த திருமணம் என்றால் சரி. திருமணத்திற்கு முன்பு என் கணவர் வீட்டாரின் விவரத்தை யார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் என் கணவரின் தாய்மாமா சொல்லி தெரிந்து கொண்டேன். எனக்கு என் கணவரின் வீட்டு விவரங்கள் திருமணத்திற்கு முன்பு நேரடியாகத் தெரியாது என்றால் சரி. என் கணவரை திருமணம் செய்து கொண்டபிறகு அவருக்கு சொந்தமாக என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்று ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. அதனால் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் அனைத்தும் என் கணவரின் சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவை என் கணவர் வாங்கிய சொத்துக்கள் தான். என் கணவர் திருமணத்திற்கு பிறகு வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை வைத்து சொத்துக்கள் வாங்கியதாக

சொல்லியிருப்பதால் அதற்கான பணத்தை எந்த முறையில் அனுப்பினார் என்பதற்கு என்னால் ஆவணங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். சில சொத்துக்கள் என்னுடைய நகையை அடமானம் வைத்து வாங்கப்பட்ட சொத்துக்கள். சொத்துக்கள் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பதற்கான விவரங்களை என்னால் தாக்கல் செய்யமுடியும் என்றால் அது என் மாமனாருக்கு தான் தெரியும். அதனால் சொத்துக்கள் வாங்கிய விவரம் என் மாமனாருக்கு தான் தெரியும் என்றால் என் மாமனார் மாமியாருக்கு தெரியும். நான் என் கணவருடன் திருமணத்திற்கு பிறகு 2001 முதல் 2012 வரை துபாயில் தங்கியிருந்தேன். அதன்பிறகு மீண்டும் 2017 க்கு பிறகு என் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லாததால் 6 மாதத்திற்கு ஒரு முறை அவ்வப்போது போய்வந்தேன். என் மாமனார் இறப்பு வரை என்னுடைய பராமரிப்பில் இருந்தார் என்றால் சரி. என் மாமனாருக்கு உடல்நலம் சரியில்லாதபோது நான் தான் கவனித்து கொண்டேன் என்றால் சரி. தாவா சொத்துக்கள் அனைத்தும் 2005 முதல் 2008 வருடத்திற்குள் என் மாமனாரால் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் என் மாமனாரால் வாங்கப்பட்டது 2012 வரை. நான் சொத்துக்கள் வாங்கப்பட்ட காலகட்டத்தில் துபாயில் இருந்ததால் யாரிடமிருந்து யாருடைய பணத்தில் சொத்து வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். நேரடியாக தெரியாது என்றால் சரி. போன் மூலமாக குடும்ப உறுப்பினர்களிடம் கலந்தாலோசித்து தான் சொத்து வாங்குவார்கள். என் கணவர் 1993 ம் வருடத்திலிருந்து வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்பதற்கு விசா ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவரை விசாரிக்கும்போது அவர் தாக்கல் செய்வார். 2003 ம் வருடம் வாதி சீத்தாராமனுக்கு திருமண செலவுகளை

செய்து என் கணவர் திருமணம் செய்து வைத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் தான் வாதிக்கு திருமணம் செய்து வைத்தோம். அதுபோல் வாதி சீத்தாராமனுக்கு 52 லட்சம் ரூபாய்க்கு வீடு வாங்கி கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்து தான் என் மாமனார் கடைசியாக என்னுடைய நகையை பேங்கில் வைத்து பணம் வாங்கி பணம் வட்டிக்கு வாங்கி வாதிக்கு வாங்கி கொடுத்த சொத்து. நான் சொல்வது பொய் என்றாலும் அதனால் தான் எதிருரையில் விளக்கமாக சொல்லாமல் அதற்கான சான்றாவணங்களை தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சீத்தாராமன் எத்தனை வருடம் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் அது எனக்கு அவ்வளவாக தெரியாது. வாதி சீத்தாராமனுக்கும் என் கணவர் குடும்பத்திற்கும் குடும்ப பிரச்சனை எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 2001 லிருந்து பிரச்சனை. 2001 முதல் குடும்ப பிரச்சனை இருப்பதால் வாதிக்கு 2009 ல் என் கணவர் செலவு செய்து திருமணம் செய்து வைத்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் கணவர் அவருடன் இணக்கமாக இருப்பார். அவர் தான் திருமணம் செய்து வைத்தார். வாதி எங்கு வேலை பார்த்தார் என்று சொல்லியிருப்பதால் 2015 ம் வருடம் வாதி Bank of RAS AI KHAMIA என்ற வங்கியில் மோசடியில் ஈடுபட்டார் என்று சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. ஆபிஸ் E-Mail மூலம் தெரிந்து கொண்டேன். என் கணவரின் ஆபிஸ் மெயில் ஐடியை வாதி கொடுத்திருக்கிறார் அதனால் என் கணவரின் ஆபீஸ் மெயிலுக்கு மேற்படி செய்தி வந்தது. நானும் என் கணவரின் மெயில் ஐடியை பயன் படுத்துவதால் அது எனக்கு தெரியும். என்னுடைய வங்கி கணக்கிற்கு மேற்படி மெயில் ஐடியை தான் கொடுத்திருக்கிறேனா என்றால் ஆமாம்.

மேற்படி மெயில் ஐடி எந்த நிறுவனத்திற்கான மெயில் ஐடி என்றால் துபாய் அல் தனாப் எலக்ட்ரிக்கல்ஸ் LLC க்கான மெயில் ஐடி ஆகும். மேற்படி மெயில் ஐடியை நானும் என் கணவரும், வாதியும் பயன்படுத்துவதற்கான எதாவது சிறப்பு காரணம் உண்டா என்றால் சிறப்பு காரணம் எதுவும் இல்லை நான் என் கணவருக்கு வேலையில் உதவி செய்ததால் பயன் படுத்தினேன். வாதியின் மேல் எத்தனை காவல் நிலைய புகார் நிலுவையில் உள்ளது என்றால் நாங்கள் கொடுத்த 2 புகார் உள்ளது. வாதி என் மீது எதாவது புகார் கொடுத்து நிலுவையில் உள்ளதா என்றால் ஒரு புகார் நிலுவையில் உள்ளது. அந்த விவரத்தை எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருப்போம். இந்தியாவில் எனக்கோ என் கணவருக்கோ வங்கி கணக்கு எதுவும் இல்லை என்றால் 2016 க்கு பிறகு என் பெயரில் இந்தியாவில் வங்கி கணக்கு உள்ளது. 2016 க்கு முன்பு எனக்கு எந்த ஒரு வங்கி கணக்கும் இந்தியாவில் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அந்த வங்கி கணக்கில் வாதி சீத்தாராமன் வெளிநாட்டில் இருந்து பணம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. 2016 க்கு முன்பு SBI வங்கியில் எனக்கு கணக்கு இருந்தது என்றால் இல்லை. 2016 க்கு முன்பு எனக்கு எந்த வங்கயில் கணக்கு இருந்தது என்றால் ICICI வங்கி, Bank of baroda வங்கிகளில் எனக்கு கணக்கு இருந்தது ஆனால் அதில் எந்த பரிவர்த்தனையும் இல்லை. அந்த கணக்கு வழக்குகளை நீதிமன்றத்தில் கேட்டு தாக்கல் செய்தால் அதில் நடந்த பரிவர்த்தனை விவரங்கள் தெரியும் என்றால் சரி. 2016 க்கு பிறகு என் கணவர் இந்தியாவில் மயிலாடுதுறையில் எதாவது சொத்து வாங்கியிருக்கிறார் என்றால் 2018 ல் என்னுடைய பெயரில் 3 ஏக்கர் நிலம் அவர் அனுப்பிய பணத்தில்

வாங்கியிருக்கிறோம். மதுபானக்கடைகளை தனியார் நடத்த கூடாது அரசு தான் நடத்த வேண்டும் என்ற உத்தரவு வந்த ஆண்டு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் தெரியாமல் 2018 முதல் வாதி மயிலாடுதுறையில் மதுபானக்கடை நடத்துகிறார் என்று தவறான சங்கதியை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அவருடைய கட்டிடத்தில் மதுபானக்கடை நடந்தது. தற்போது அந்த கட்டிடத்தில் பல் மருத்துவமனை உள்ளது. மேற்படி விவரத்தை மறைத்து எதிருரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் அவர் மதுபானக்கடை நடத்துவதாக பொய்யான சங்கதிகளை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மதுபானக்கடையை தெருவில் உள்ளவர்கள் புகார் கொடுத்து தற்போது தான் காலி செய்து மருத்துவமனை வைத்துள்ளார்கள். அந்த கட்டிடம் உள்ள விலாசம் என்ன என்றால் பஞ்சாப் நேஷனல் பேங்க் எதிரே, மகாதானத்தெருவில் உள்ளது கதவு எண் தெரியாது. தெருவில் உள்ளவர்கள் புகார் கொடுத்ததாக சொல்வதால் அந்த புகாரை யார் கொடுத்தார்கள் என்று தெரியுமா அதை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை தெரியாது. என் கணவரின் தம்பியான 4ம் பிரதிவாதி முத்துராமன் தற்போது அவருடைய அம்மாவின் பராமரிப்பில் இருக்கிறார். மனநலம் பாதிக்கப்பட்ட 4ம் பிரதிவாதியை ஏமாற்றி வாதி சொத்து எழுதி வாங்கி கொண்டதாக சொல்லும் தேதி, மாதம், வருடம் என்ன என்றால் 2015ம் வருடம் மாதம், தேதி தெரியாது. வாதி அந்த சொத்தை தனது மனைவி பெயரில் தான செட்டில்மென்ட் எழுதி வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். எப்போது கேள்விப்பட்டேன் என்றால் 2, 3 மாதத்தில் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக எப்போது புகார் கொடுத்தேன் என்றால் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. அதனால் எனது பிரமாண

வாக்குமூலத்தில் புகார் திருவாரூரில் இருந்து வருவதாக பொய்யான சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. புகார் என் மாமியார் கொடுத்தார் அது நிலுவையில் உள்ளது. 2015ம் ஆண்டு ஏற்பட்டதாக சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணத்தை காப்பி வாங்கி பார்த்து அதில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர், என்றும் அது முறையாக ஏற்பட்ட ஆவணமா என்றும் தெரிந்து கொண்டோமா என்றால் தெரிந்து கொண்டோம். அதன்பிறகு தான் அத்தை புகார் கொடுத்தார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று இதுவரை நீதிமன்றத்தின் மூலமாகவோ சார்பதிவாளர் அலுவலகம் மூலமாகவோ நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என் மாமியாரிடம் தான் கேட்கவேண்டும். 27.02.2016 அன்று என் குடும்பத்தார் எல்லோரும் சேர்ந்து ராமநாதன், முருகையன், கோதண்டபாணி ஆகியோர் சேர்ந்து குடும்ப பிரச்சனை சம்பந்தமாக சமரசம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கான விவரங்கள் எதுவும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் கணவருக்கும், வாதிக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி மூலம் பண பரிவர்த்தனை நடந்தது என்றாலும் அதை நான் வேண்டுமென்றே இந்த வழக்கிற்காக மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வாதி எனக்கு எந்த பண பரிவர்த்தனையும் செய்யவில்லை. அதனால் தான் 2016ம் வருடத்திற்கு பிறகு ஆறு மாதத்திற்கு ஒரு முறை துபாய் சென்று வந்தேன் என்றால் சரியல்ல. என் மாமனார் மாமியாரை பார்த்து கொள்வதற்காக இந்தியாவிற்கு வருவேன். என் கணவருக்கு மருந்து மாத்திரை எடுத்துபோவேன். என்

கணவகும், எனக்கும், வாதிக்கும் இடையே ஏற்பட்ட வங்கி பரிவர்த்தனையை வங்கி அதிகாரிகளை அழைத்து விசாரித்தால் தெரியவரும் என்றால் சரி.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

4/3/25

மாவட்ட நீதிபதி

மயிலாடுதுறை

04/3/25